மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்

பொருள் எண்: 01

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் – 2025 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

பொருள் எண்: 02

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.3582/PPC/2024, நாள்.05.05.2025 நாளிட்ட கடிதத்தில் தமிழக அரசின் நான்கு ஆண்டு சாதனைகள் குறித்த தகவல்கள் அனைத்து அலுவலகங்களிலும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையம், மருத்துவமனை, மற்றும் பொதுமக்கள் காத்திருப்பு இடங்களில் சுவரொட்டிகள், ப்ளெக்ஸ் போர்டுகள், சுவர் ஓவியங்கள், LED மூலமாக காட்சிகள் ஒளிபரப்புதல் மற்றும் துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சியில் செயல்படும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், சாலைப்பணிகள், பூங்காக்கள் அமைத்தல் பணி, புதிய பேருந்து நிலையம் கட்டுமான பணி, நவீன எரிவாயு தகன மேடை பணி, நீர் நிலைகள் மேம்படுத்துதல் பணி, குடிநீர் பணிகள், பள்ளி மேம்பாட்டு திட்ட பணிகள், தெரு விளக்கு பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், போன்ற துறை சார்ந்த திட்ட பணிகளை பொதுமக்கள் அறியும் பொருட்டு நகராட்சிக்கு தேவையான மல்டி கலர் ஸ்டிக்கர்கள் 8000 எண்ணம் மற்றும் மல்டி கலர் நோட்டீஸ்கள் 10000 எண்ணம் ஆகியவற்றை அச்சடிக்கும் பணிக்கு தேராய செலவினம் ரூ.2.50 இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1975/2025/இ1)

பொருள் எண்: 03

வடலூர் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 5 எண்ணிக்கையிலான சமுதாய கழிப்பறைகள் மற்றும் ஒரு பொது கழிப்பறைகள் என மொத்தம் 6 எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனை தினசரி பராமரிக்க சுய உதவிக்குழுக்கள் மூலமாக ஆட்களை கொண்டு பணி மேற்கள்ள மேற்கண்ட கழிப்பறையில் தூய்மைப்பணியை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு மாத ஊதியம் (மாவட்ட ஆட்சித்தலைவரின் அவர்களின் தினக்கூலி Part Time – sweepers என்ற இனத்தின் கீழ் தொகை வழங்கவும் அக்டோபர் – 2025 முதல் மார்ச்சு – 2026 வரையிலான காலத்திற்கு அதற்கான செலவினம் ரூ.2.00 இலட்சம் மட்டும் பணியை மேற்கள்ள மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட தொகையை மாதம் தோறும் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1405/2025/எச்1

பொருள் எண்: 04

வடலூர் நகராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் மெயின் குடிநீர் பைப்பு லைன் அத்தியாவசிய பணிக்கு JCB இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் ஹட்ராலிக் ஆயில் மற்றும் அவ்வப்போது ஏற்டும் பழுதுகளை நீக்கம் செய்ய TN31CF2873 JCB யின், பழுதுகளை நீக்கம் செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான, வடலூரில் டயனடெக் நிறுவனத்திடம் , பழுதுகளை நீக்கம் செய்ய ரூ.1.00 இலட்சம் செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட செலவினத்திற்காகன தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 0913/2025/எச்1

பொருள் எண்: 05

வடலூர் நகராட்சிக்குட்பட்ட ஆபத்தாரணபுரம் கிராமம் புல எண்கள். 147/4A1 மற்றும் 147/4A2 ஆகியவற்றில் அமையும் 2933.00ச.மீ பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திரு.N. ஜெயபிரகாஷ் த/பெ K.நந்தகோபால் என்பவர் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் கடித எண்.3BEH0S7/2024/TCP, நாள்.29.08.2024ல் நிபந்தனைகளுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மனுதாரரால் மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய இடங்களை நகராட்சி ஆணையர் பெயருக்கு தானபத்திர ஆவண எண்2868/2024, நாள்.13.08.2024 மூலம் ஒப்படைப்பு செய்துள்ளார்.

மனுதாரரால் மேற்படி, மனைப்பிரிவில் தார் சாலை, மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான மூன்றாம் நபர் தரச் சான்றும் பெறப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர், தனது 21.07.2025ந் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும் மின்கம்பம் மின்பாதை அமைக்க மின்சார வாரியத்திடமிருந்து பெறப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.52,000/– மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரரால் மனைப்பிரிவிற்கு நிலபயன் மாற்று கட்டணமாக ரூ.73,000/– இந்தியன் ஒவர்சீஸ் வங்கி காசோலை எண்.273422, நாள்.28.07.2025 செலுத்தப்பட்டு நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது..

எனவே, ஆபத்தாரணபுரம் கிராமம் புல எண்கள். 147/4A1 மற்றும் 147/4A2 ஆகியவற்றில் அமையும் 2933.00 ச.மீ பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் செயல்முறை உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்ட தானபத்திரம் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய இறுதி ஒப்புதல் மனைப்பிரிவிற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1504/2025/எப்1)

பொருள் எண்: 06

வடலூர் நகராட்சிக்குட்பட்ட சேராக்குப்பம் கிராமம் புல எண்கள். 235/12, 235/18, 250/6A, 250/6B, 250/7, 251/1A, 251/1B, 251/1C, 251/3, 251/4, 252/2, 252/3, 252/4, 252/5, 252/6, 252/7 மற்றும் 252/18A2 ஆகியவற்றில் அமையும் 19660.00ச.மீ பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திரு.R.சிவராமன் த/பெ இராமானுஜம் என்பவர் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார். அதைத் தொடர்ந்து மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் கடித எண்.OHTN94G/2025/TCP/2025/TCP, நாள்.05.06.2025ல் நிபந்தனைகளுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி மனுதாரரால் மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய இடங்களை நகராட்சி ஆணையர் பெயருக்கு தான பத்திர ஆவண எண்.1968/2025, நாள்.16.05.2025 மூலம் ஒப்படைப்பு செய்துள்ளார். மனுதாரரால் மேற்படி, மனைப்பிரிவில் சாலை அமைக்கப்பட்டு அதற்கான மூன்றாம் நபர் தரச் சான்றும் பெறப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர், தனது 25.07.2025ந் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும், பொறியாளரால்

மனைப்பிரிவிற்கு மழைநீர் வடிகால் அமைக்கவும், குடிநீர் குழாய் பதிக்கவும் மதிப்பீடு தொகை செலுத்த கோரியதன்படி மனுதாரரால் மதிப்பீடு தொகை ரூ.58,00,000/- சிட்டி யூனியன் வங்கி காசோலை எண்.128918, நாள்.03.09.2025 செலுத்தப்பட்டு நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் மின்கம்பம் மின்பாதை அமைக்க மின்சார வாரியத்திடமிருந்து பெறப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,14,262/- மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரரால் மனைப்பிரிவிற்கு நிலபயன் மாற்று கட்டணமாக ரூ.4,86,000/- சிட்டி யூனியன் வங்கி காசோலை எண்.128920, நாள்.09.09.2025 செலுத்தப்பட்டு நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே, சேராக்குப்பம் கிராமம் புல எண்கள். 235/12, 235/18, 250/6A, 250/6B, 250/7, 251/1A, 251/1B, 251/1C, 251/3, 251/4, 252/2, 252/3, 252/4, 252/5, 252/6, 252/7 மற்றும் 252/18A2ல் அமையும் 19660.00 ச.மீ பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் செயல்முறை உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்ட தானபத்திரம் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய இறுதி ஒப்புதல் மனைப்பிரிவிற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1003/2025/எப்1)

பொருள் எண்: 07

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்திவரும் அனைத்து பிரிவுகளிலும் உள்ள கணினி மற்றும் பிரிண்டர்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை Software மற்றும் Hardware உடன் சரிசெய்ய இயலாமல் உள்ளது. மேலும், இந்நகராட்சியில் கணினி திட்ட நிகழ்வாளர் பணியிடம் இல்லாததால் கணினி சம்மந்தமான பழுதுகளை நீக்கம் செய்திட இயலவில்லை என்பதால் இந்நகராட்சிக்கு கணினி பழுதுபார்ப்பு வருடாந்திட பராமரிப்பு பணி (AMC) மேற்கொள்ளவும் மற்றும் பிரிண்டர்களுக்கான டோனர்கள் கொள்முதல் செய்யவும் இவ்வலுவலக பிரிவு எழுத்தர்களால் கோரப்பட்டதை தொடர்ந்து கீழ்காணும் கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்களை பராமரிக்கும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.60 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1.	Desk Top Computer	20 Nos
2.	Laptop	1 Nos
3.	Ricoh A3 Xerox Machine Heavy	1 Nos
4.	Brother Laser Printer	5 Nos
5.	HP Laser Printer	3 Nos
6.	HP Color Printer	1 Nos
7.	TVS Dot Matrix Printer	1 Nos
8.	Epson Color Printer	1 Nos
9.	Canon All in one printer (Color)	3 Nos
10.	Cash Counting Machine	1 Nos
11.	Switches & Networking Panel	
12.	Wi-fi Routers	
13.	Complete Networking (Full Setup)	

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.903/2025/இ1)

பொருள் எண்: 08

வடலூர் நகராட்சிக்கு சொந்தமான புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள பேருந்து நிலைய கடைகளுக்கு மாத கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்க 01.09.2025, 02.09.2025 மற்றும் 03.09.2025 அன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தபுள்ளிகளில் ஏலம்/ஒப்பந்தபுள்ளி போக கடைகளுக்கு 24.09.2025 மற்றும் 08.10.2025 ஆம் தேதியில் மறுஏலம்/மறுஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் நடைபெற்றது.

வ. எண்	கடை எண்	கலந்து கொண்ட ஏலதாரர் கள் விபரம் மற்றும் ஏலத் தொகை ரூ	தொகை	கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் கள் விபரம் மற்றும் ஏலத்தொகை ரூ	தொகை	கடை எண்	உயர்ந்தபட்ச ஏலதாரர் அல்லது ஒப்பந்ததாரர் கோரிய பெயர் மற்றும் தொகை ரூ	தொகை
1	2	3	4	5	6	7	8	9
A BLOCK								
வெளிபுற கடை கீழ்தளம்								
1	6			எஸ். இராஜேந்திரன்	36,000	6	எஸ். இராஜேந்திரன்	36,000
				எஸ். கோபாலகிருஷ்ணன்	25,700			
				ரமாதேவி	21,111			
				எ. அரவிந்த்	34,300			
		எ.வாகிதா	35,000					
		ஆர். முருகேசன்	11,000					
		சி.சங்கர்	31,000					
		வி.புருஷோத்தமன்	கேள்விஏதும் இல்லை					
		எம். பாலாஜி	25,100					
A BLOCK								
உட்புற கடை கீழ்தளம்								
2	14			ஜி. தங்கதுரை	20,000	14	எஸ்.விமல்	25,000
				சி.சங்கர்	17,110			
				ஆர். பாலாஜி	23,000			
				வி. சக்திவேல்	9200			
		எஸ்.விமல்	25,000					
3	24			மதிமலர்விழி	23,100	24	பி.ஆர்.செந்தில்குமார்	27,100
				இரஞ்சித்குமார்	12,000			
				மணிவேல்	18,500			
				எஸ்.கோபாலகிருஷ்ணன்	15,610			
				சே.உமாராணி	13200			
		பி.ஆர்.செந்தில்குமார்	27,100					
A BLOCK								
வெளிபுற கடை மேல்தளம்								
4	52			லட்சுமி	7,800	52	பி.கொளஞ்சி	8,600
		பி.கொளஞ்சி	8,600					
5	54			சிந்து	8,500	54	சிந்து	8,500
				ரகுநாதன்	8,000			
6	57			எம்.ராஜ்குமார்	7,800	57	எம்.மணியரச	8,600

		எம்.மணியரசன்	8,600				ன்	
7	59			டி.செந்தில்வடிவு	8,100	59	டி.செந்தில்வடிவு	8,100
				ஐ.திவாகர்	8,000			
A BLOCK								
உட்புற கடை மேல்தளம்								
8	77			எஸ்.ஜெயசந்திரன்	6,000	77	எஸ்.சங்கீதா	6,500
				எஸ்.சங்கீதா	6,500			
B BLOCK								
உட்புற கடை கீழ்தளம்								
9	30			பி.விவேகானந்தன்	7,600	30	டி.விக்டோரியாமேரி	8,200
		டி.விக்டோரியாமேரி	8,200					
10	31			கே.சக்திவேல்	10,200	31	டி.கலாராணி	17,500
				டி.கலாராணி	17,500			
				டி.கலாராணி	15,555			
		சி.செல்வதுரை	14,500					
11	35			டி.பிரதீபன்	9,105	35	சங்கர்	17,100
				சுந்தரி	13,000			
				சங்கர்	17,100			
		ஜெ.வனஜா	15,100					
		சதிஷ்குமார்	15,300					
12	41			எல்.மார்டின் ஆரோக்கியதாஸ்	19,500	41	எல்.மார்டின் ஆரோக்கியதாஸ்	19,500
				கே.ராஜமாணிக்கம்	10,500			
		என்.இராதாகிருஷ்ணன்	17,200					
		எஸ்.இராஜராஜன்	17,000					

மேற்கண்டுள்ள விபரப்படி நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பட்டியலின்படி சம்பந்தப்பட்ட குத்தகை கடைகளுக்கு கலம் எண் 8–ல் கண்டுள்ள உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரிய குத்தகைதாரர்களுக்கு ஏலம் மற்றும் குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு 12 ஆண்டுகள் குத்தகையினை நடத்திக்கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் உயர்வு செய்து அதற்கான 18 சதவீதம் ஜிஎஸ்டி தொகையினை செலுத்தி குத்தகையினை புதுப்பித்துக்கொள்ளவும் சம்பந்தப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மேற்படி பட்டியலில் கண்டுள்ள உயர்ந்தபட்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள குத்தகைதாரர்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்குட்பட்டு பணி உத்திரவு வழங்கவும் மேற்படி குத்தகை இனங்களுக்கு கடை ஒப்படைத்த நாள் முதல் கேட்பு எழுப்பி வசூலிக்கவும் மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 170 /2025/அ1)

பொருள் எண்: 09

வடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு JCB வாகனம் இயக்குவதற்கு நிரந்தர பணியாளர் இல்லாததால் பொது சுகாதார பிரிவு அலுவலரின் குறிப்பின்படி ஒரு நபரை வெளிகொணர்வு முகமை

மூலமாக பணி நியமனம் செய்து அனுப்பிவைக்குமாறு ஆணையாளர் அவர்கள் அறிவுறையின்படியும் துப்பரவு ஆய்வர் அவர்களின் குறிப்பின்படியும் ஒரு நபரை வெளிகொணர்வு முகமை மூலமாக பணி நியமனம் செய்ய மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1063/2025/இ1)

பொருள் எண்: 10

இந்நகராட்சியில் இந்நகராட்சியில் நகர் மன்றத்தலைவர் ஈப்பு வாகன எண் TN 31 CE8496. ஆணையாளர் ஈப்பு வாகன எண் TN 31 CE8476 மற்றும் நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகன எண் TN 31 CE8412 ஆகியவற்றிற்கு நிரந்ததர ஓட்டுநர்கள் எவரும் இல்லாத காரணத்தால் சுய உதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதைய அரசின் நெறிமுறைகளின்படி வெளிக்கொணர்வு முகமை பணியாளர்களை கணக்கீடு செய்தும் மேலும், பணியாளர்களுக்கான தினசரி ஊதியத்தினை PWD SOR அல்லது மாவட்ட ஆட்சியர் விலைப்பட்டியல் விகிதத்தில் நிர்ணயித்து வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021 சுற்றறிக்கையின்படி நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் M2/509309/2023. நாள்.19.06.2023ல் உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.அரசின் நெறிமுறை மற்றும் அளவுகோலின்படி வெளிகொணர்வு முகமை பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் பணியினை மேற்கொள்ள ஆறு மாதத்திற்கு ஆகும் செலவினம் ரூ.6.30 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக்குறிப் 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

கோப்பு. எண்.548/2025/இ1

பொருள் எண்: 11

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, வெங்கட்டங்குப்பம் நகராட்சி தொடக்கப்பள்ளி வாளகத்தில் பழைய சமையல் அறை கட்டிடம் கட்டப்பட்டு 35 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் மிகவும் பழுதடைந்து நிலையில் உள்ளதால் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு நலன் கருதி இடித்து அப்புறப்படுத்துமாறு 27 வார்டு நகர் மன்ற உறுப்பினர் 03.10.2025–ல் நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டதில் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட, சமையல் அறை பயன்பாட்டில் இல்லை, மாற்றாக புதிய சமையல் அறை கட்டிடம் அதன் அருகில் செயல்பட்டு வருகிறது. எனவே, எதிர்வரும் காலம் மழைக்காலம் என்பதாலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின் படி சமையல் அறை கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1987/2025/இ1)

பொருள் எண்: 12

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகளில் உள்ள தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் சாதிப்பெயர்கள் போன்றவற்றை நீக்கம் செய்யவும், புதியதாக பெயர் வைக்கவும் தமிழக அரசால் அரசாணை எண்.313, நாள்.06.10.2025 அரசாணை வெளியிடப்பட்டது. அதன், அடிப்படையில் கீழ்கண்ட சாதிப்பெயர்களை இந்நகராட்சி .பொதுப்பயன்பாட்டில் இருந்து நீக்கம் செய்து புதியதாக பெயர் வைப்பது என வார்டு சபா/ ஏரியா சபா மூலம் நாள்.13.10.2025ல் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

மாற்றம் செய்யப்பட வேண்டிய தெருக்களின் பெயர்

வ.எண்.	வார்டு எண்.	பழைய தெரு / நீர்நிலைகள் பெயர்	புதிய தெரு / நீர்நிலைகள் பெயர்
1.	3	கக்கிளர் தெரு	கிழக்கு தெரு
		கக்கிளர் தெரு (அம்பேத்கார் நகர்)	கிழக்கு தெரு
		பெரிய காலனி	அம்பேத்கார் தெரு 1
		சின்ன காலனி	அம்பேத்கார் தெரு 2
		கஞ்சமநாதபுரம் காலனி	அம்பேத்கார் தெரு 3
2	25	சின்ன காலனி நடுத்தெரு	பாரதியார் தெரு
		சின்ன காலனி வடக்கு தெரு	அம்பேத்கார் தெரு
		சின்ன காலனி தெற்கு தெரு	மாத்தூரார் தெரு
3	27	1வது நரிக்குறவர் தெரு	காந்தி நகர்
4	24	வண்ணான் குட்டை	குறிஞ்சி குட்டை

அலுவலக குறிப்பு :– வார்டு சபா/ ஏரியா சபா அனுமதிக்கலாம்

(கோப்பு எண். /2025/இ1)

பொருள் எண்: 13

பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தக்கூடிய கிருமிநாசினிகள் மற்றும் தளவாடப்பொருட்கள் வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் மற்றும நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் பொதுசுகாதாரத்திற்கு தேவையான கிருமிநாசினிகள் அதிகமாக இருப்பில் வைத்துக்கொள்ள அறிவுறுத்தியதின்பேரில் கிருமிநாசினிகள் மற்றும் தளவாடப்பொருட்கள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் வாங்குவதற்கும் அதற்கான செலவினம் ரூ.3.00 இலட்சம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார நலன் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும் கிருமிநாசிகள் வாங்குவாற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். /2025/இ1)

நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி

வடலூர் நகராட்சி

மன்றக் கூட்ட அழைப்பிதழ்

****

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16.10.2025. வியாழன் கிழமை காலை 10.30 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,

வடலூர் நகராட்சி.